தமிழ்நாடு அனைவருக்கும் கல்வி இயக்கம்

"அனைவரும் கற்போம்" "அனைவரும் உயர்வோம்"

அனுப்புநர்

மாநிலத் திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் கல்வி இயக்ககம்,
சென்னை – 600 006.

பெறுநர்

மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்,
அனைத்து மாவட்டங்கள்

ந.க.எண்.1399/REM/அகஇ/2012 நாள்.01.06.2012

பொருள்:- அனைவருக்கும் கல்வி இயக்கம் – 2012–13 ஆம் ஆண்டுக்கான செயலாராய்ச்சி பணி மேற்கொள்ளுதல் – சார்பு.

******

தொடக்க மற்றும் உயர் தொடக்கக் கல்வி நிலையில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் தரமான கல்வியை வழங்குவது, அந்தந்த வகுப்புகளுக்கு ஏற்ற கற்றல் திறன்களை அவர்கள் அடைய வைப்பது, பழைய கற்பித்தல் முறைகளில் உள்ள குறைகளைக் களைந்து புதிய அணுகுமுறையில் கற்றல் அடைவுகளை மாணவர்கள் அடைய உதவுவது ஆகியன அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் இலக்காகும். இந்த இலக்கினை அடைவதில் ஏற்படும் இடர்களை களைய தொடக்க மற்றும் உயர் தொடக்கக் கல்வி ஆசிரியர்கள் செயலாராய்ச்சி மூலம் தீர்வுகாண வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் அவரவர் பள்ளிச் சூழலில் அன்றாடம் சந்திக்கும் பிரச்சனைகளை அறிவியல் முறையில் அணுகி, ஆராய்ச்சி மூலம் தீர்வுகளைக் கண்டறிந்து, புதிய கற்பித்தல் முறைகளைக் கையாண்டு மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த இந்த செயலாராய்ச்சி பயனுள்ளதாக உள்ளது.

அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீ¦ழ் 2012–13 ஆண்டில் நமது மாநிலத்தில் 4010 செயலாராய்ச்சிகள் மேற்கொள்ள ஆண்டு வரைவுத் திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளைப் போலவே இந்த கல்வியாண்டிலும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 401 வட்டாரங்களில் வட்டாரத்திற்கு 10 செயலாராய்ச்சிகள் வீதம் மொத்தம் 4010 செயலாராய்ச்சிகள் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**<u>செயலாராய்ச்சி மேற்கொள்ளும் ஆசிரியர்களை தேர்ந்தெடுத்தல்</u>**

2012–2013 ம் ஆண்டில் செயலாராய்ச்சி மேற்கொள்ளுவதற்கு ஏற்கனவே செயலாராய்சி மேற்கொண்ட ஆசிரியர்களை மீண்டும் தேர்வு செய்யாமல் முற்றிலும் புதிய தொடக்க, உயர் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களைத் தேர்வு செய்ய வேண்டும். ஒவ்வொரு வட்டாரத்திலும் 10 ஆசிரியர்களை தேர்வு செய்து, தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்களின் பெயர் பட்டியலை அந்தந்த மாவட்ட திட்ட ஒருங்பிணைப்பாளர்கள் 30.06.2012 க்குள் மாநில திட்ட இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

www.TeacherTN.com

**மாவட்ட அளவிலான செயலாலாய்ச்சிப் பயிற்சி**

கடந்த ஆண்டில் வழங்கப்பட்ட செயலாராய்ச்சிப் பயிற்சியினை போன்று இந்த ஆண்டிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் செயலாராய்ச்சி செய்வதற்கு தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு மாவட்ட அளவில் ஒரு நாள் கருத்தூட்டல் பயிற்சி (Orientation training) நடத்தப்பட வேண்டும். மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன ஆசிரியர்கள் (DIET-Lecturers) மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்களால் (BRTEs) அப்பயிற்சி வழங்கப்பட வேண்டும். இப்பயிற்சியை ஜுலை மாதத்தில் ஒருநாள் நடத்துவதற்கான ஏற்பாட்டை மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் செய்திட வேண்டும். இப்பயிற்சி வழங்க தேவைப்படும் செலவினத் தொகையினை REM தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**<u>செயலாராய்ச்சித் தலைப்புகளைத் தேர்ந்தெடுத்தல்</u>**

செயலாராய்ச்சி மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு மேற்காண் கருத்தாக்கப் பயிற்சிகள் (Orientation Programmes) வழங்கப்பட்ட பின்னர், அந்த ஆசிரியர்கள் செயலாராய்ச்சிக்கான தலைப்புகளை தேர்வு செய்ய வேண்டும். கடந்த ஆண்டுகளில் தேர்வு செய்த செயலாராய்ச்சித் தலைப்புகளையே மீணடும் தேர்வு செய்யாமல், புதிய கோணத்தில், புதிய தலைப்புகளை தேர்வு செய்ய வேண்டும். செயலாராய்ச்சித் தலைப்புகளை தேர்வு செய்யும் பொழுது மிகுந்த கவனத்துடன் செயல்பட்டு பள்ளிச் சூழலில் தற்பொழுது காணப்படும் பிரச்சனைகளுக்கான தீர்வினை காணும் வகையில் தேர்வு செய்ய வேண்டும். செயலாராய்ச்சி தலைப்புகளை ஆசிரியர்கள் தேர்வு செய்த பின்னர், ஆசிரியர்களின் பெயர் பட்டியல் தொகுப்பு அறிக்கையை **10.08.2012** க்குள் மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும். (ஆசிரியர்கள் பெயர் பட்டியல் தொகுப்பு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது).

**<u>செயலாராய்ச்சி மேற்கொள்ளுதல்</u>**

மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு வட்டாரத்திற்கும் பத்து செயலாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் இது வருகின்ற ஆகஸ்டு மாதத்தில் தொடங்கப்பட்டு நவம்பர் மாதத்தில் முடிக்கப்பட வேண்டும்.

செயலாராய்சி முடித்தபின் தீர்வு அறிக்கைகளை வட்டார அளவில் ஆசிரியர்களிடமிருந்து பெற்று வட்டார வளமையத்தில் வைத்துக்கொண்டு பள்ளித் தொகுப்பு கருத்தாய்வு மையங்களில் (CRC) இவ்வாராய்ச்சிகள் குறித்த முடிவுகளை கலந்து ஆலோசிக்க வேண்டும். இதே போன்று வகுப்பறையில், பள்ளி சூழலில் உருவாகும் பிரச்சனைகளுக்கு உரிய தீர்வுகளைக்காண செயலாராய்ச்சிகளின் முடிவுகளை முன்மாதிரியாக கொண்டு செயல்படவும் ஆலோசனை வழங்கலாம்.

மாவட்ட அளவில் மேற்கொள்ளப்பட்ட செயலாராய்ச்சி முடிவுகள் இக்கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள செயலாராய்ச்சி – ஆய்வுச் சுருக்கப் படிவத்தில் – Action Research - Findings Abstracts Format) தயாரித்து தொகுக்கப்பட வேண்டும்.

www.TeacherTN.com

மாவட்ட அளவில் தொகுத்த அறிக்கையை (CD மூலம் Softcopy & Hard Copy) மாநில திட்ட இயக்ககத்திற்கு டிசம்பர் மாதத்திற்குள் சமர்ப்பிக்க அனைத்து மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஒவ்வொரு செயலாராய்ச்சிக்கும் வழங்கப்படும் தொகைக் குறித்து தனியே ஆணை வழங்கப்படும்.

மாநிலத் திட்ட இயக்குநர்

<u>இணைப்பு</u>

1. ஆசிரியர்கள் பெயர் பட்டியல் தொகுப்பு அறிக்கை படிவம்
2. செயல் ஆராய்ச்சி – ஆய்வுச் சுருக்கப் படிவம்
   Action Research - Findings Abstracts (Format) - (Tamil and English)

www.TeacherTN.com